உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

*S.C No.583/2023*

பெயர் : அழகர்சாமி*(*அ.சா.*7)*
தகப்பனார் பெயர் : வேலு ஆசாரி
கணவர் பெயர் :
வயது :55
கிராமம் :பூதமங்கலம்
வட்டம் :மேலூர்
தொழில் :ஜோதிடர்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

*12.12.2024*

**முதல் விசாரணை:**

நான் பூதமங்கலத்தில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எங்கள் ஊரைச்சார்ந்தவர்கள். *2*ம் எதிரியுடைய அண்ணன் மகள் நதியாவை எனக்கு தெரியாது. கடந்த *20.12.2021* அன்று காவல்நிலையத்தார் சம்பவ இடத்தில் வரைபடம் வரைந்தார்கள். அப்போது நான் அங்கு இருந்தேன். சாட்சியிடம் பார்வை மகஜர் காட்டப்பட்டு அதில் உள்ள *1*வது கையெழுத்து தன்னுடையது தான் என்று சாட்சி ஒப்புக்கொள்ளவே மேற்படி *1*வது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.*4* ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி பார்வைமகஜரில் என்னுடன் கையெழுத்து செய்த நபர் பெயர் கிருஷ்ணன் அவர் தற்போது உயிருடன் இல்லை இறந்துவிட்டார். அவரும் என் ஊர்க்காரர் தான். காவலர்கள் கையெழுத்து மட்டும் என்னிடம் கேட்டார்கள் என்னை விசாரிக்கவில்லை.

குறுக்கு விசாரணை :

இதற்கு முன்னால் கூலியாக வேலை செய்து வந்தேன் தற்போது ஜோதிடம் பார்த்து வருகிறேன். கடந்த *2* ஆண்டுகளாக ஜோதிடம் பார்த்து வருகிறேன். தும்பைபட்டியில் நான் அலுவலகம் அமைத்து ஜோதிடம் பார்த்து வருகிறேன் என்றால் சரிதான். காலை *10.00* மணி முதல் மாலை *6.00* மணி வரை ஜோதிடம் பார்ப்பேன். நான் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்று காலதாமதமாக பூதமங்கலத்திற்கு வந்தேன் என்றால் சரிதான்.

பூதமங்கலத்திற்கு சம்பவம் நடந்த அன்று என் மனைவி போன் செய்ததால் மதியம் *3.00* மணியளவில் வந்துவிட்டேன். போலிசார் அழைத்ததன் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் என் பெயரையும், என்அப்பா பெயரையும் கேட்டுக்கொண்டு காவலர்கள் வெற்றுத்தாளில் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான் என்று சாட்சி குறிப்பிட்டுவிட்டு வரைபடம் வரைந்த தாளில் கையெழுத்து பெற்றதாக குறிப்பிடுகிறார். வரைபடத்தில் என்ன குறிப்பிடப்பட்டிருந்தது என்று தெரியாது என்றால் அதில் வீடு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது, நான் அதை படிக்கவில்லை. காவலர்கள் என்னை தனிப்பட்ட முறையில்விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடன் கையெழுத்து செய்த நபரிடம் எப்போது எங்கு கையெழுத்து பெற்றார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் அவரும் என்னுடன்தான் கையெழுத்து செய்தார். கிருஷ்ணன் என்பவரிடம் என்ன விசாரணை காவலர்கள் செய்தார்கள் என்பது தெரியாது என்றால் இல்லை எனக்கு தெரியும் காவலர்கள் விசாரணை செய்தார்கள். சம்பவம் நடந்த இடத்திற்கு அருகே என்னுடைய வீடோ கடையோ, கிருஷ்ணனின் வீடோ கடையோ, அருகில் இல்லை என்றால் சரிதான். என்னிடம் விசாரணை செய்வதற்கு முன்பாக கீழவளவு காவல்நிலையத்தார் என்ன விசாரணை செய்தார்கள் யாரிடம் என்ன பொருட்களை கைப்பற்றினார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் சொல்வது போல் சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில் விசாரணை செய்து கையெழுத்து பெறவில்லை என்றும், நான் காவலர்கள் கேட்டுக்கொண்டதன் பேரில் அவர்களுக்கு அனுசரணையாக கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கிருஷ்ணன் என்பவர் எனது முன்னிலையில் கையெழுத்து செய்யவில்லை என்றும் அவர் இறந்துவிட்டதால் கிருஷ்ணன் கையெழுத்து செய்ததை பார்த்ததாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் சம்பவ இடத்தில் அது நடந்ததற்கான

பொருட்களோ, தடயமோ இருந்ததற்கானதை பார்த்தீர்களா என்றால் பார்க்கவில்லை.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2024.12.12 18:46:05 +0530

Assistant Sessions Judge
Melur